Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, அக்டோபர் 24, 2026 | இதழ் 194

# அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வான 69 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார் முதல்வர் விஜய்



சென்னை, 24 அக்டோபர் 2026: முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் இன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை-உழவர் நலத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 69 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, தருமபுரி, செங்கல்ராயன், சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி-மிமி ஆகிய நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் தேசிய அளவில் பெற்றுள்ள விருதுகளைக் காண்பித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துகளைப் பெற்றனர்.

வேளாண்மை-உழவர் நலத் துறையின் திட்டங்களைக் களஅளவில் செயல்படுத்தி வரும் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 26 உதவி வேளாண்மை அலுவலர்கள், 43 உதவி தோட்டக்கலை அலுவலர்கள் என மொத்தம் 69 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை இன்று வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

2024-2025ஆம் ஆண்டிற்கான நிதி மேலாண்மைக்கான முதல் பரிசை தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் நிறுவனத்திற்கும், 2024-2025ஆம் ஆண்டிற்கான சமூகப் பொறுப்பிற்கான விருதை செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் நிறுவனத்திற்கும், 2025-2026ம் ஆண்டிற்கான நிதி மேலாண்மைக்கான முதல் பரிசை சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த செயல் திறனுக்கான சர்க்கரை ஆலைக்கான விருதை கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் நிறுவனத்திற்கும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள், முதலமைச்சர் அவர்களிடம் விருதுகளைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.இந்நிகழ்வில், அமைச்சர் ர.வினோத், தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத் துறை செயலாளர் நா. வெங்கடேஷ், சர்க்கரைத் துறை ஆணையர் இரா. கண்ணன், வேளாண்மை இயக்குநர் க.வீ. முரளீதரன் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் ஜெ. விஜயா ராணி, சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் ச. அருண்ராஜ் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் ஆர். பிரியா தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் பி. மேனகா, செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் ஏ. பூங்கோதை, கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் (பொறுப்பு) / மாவட்ட வருவாய் அலுவலர் பி. மணிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும்; பிரதமர் வலியுறுத்தல்



சென்னை 24, அக்டோபர் 2026: நமது கல்வி முறையானது புதிய இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். எனவே நாங்கள் ஒரு புதிய தேசிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளோம். இக்கொள்கையானது இந்திய அறிவுப் பாரம்பரியம், தாய் மொழிக் கல்வி, நவீன அறிவியல் மற்றும் புதிய தொழில் நுட்பம் போன்றவற்றுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கிறது என்றார்.

தேசிய கல்விக் கொள்கையானது பாரம்பரிய இந்திய அறிவு முறைகளை அதி நவீன தொழில்நுட்பத்துடன் இணைக்கிறது என்றும், நவீன இந்தியக் கல்வியானது பண்டைய மரபுகளை நவீன அறிவியல் முன்னேற்றங்களுடன் ஒன்றிணைக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

சின்மயா அம்ரித் மகோத்சவ் உலகளாவிய மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், இந்தியாவின் பண்டைய அறிவை மீட்டெடுப்பதற்கும், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி பெற்ற இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கும் பொதுமக்களின் நலனுக்காகத் தனிப்பட்ட முறையில் இயங்கும் சமூக அமைப்புகளின் பங்களிப்பு முக்கியமானது என்று வலியுறுத்தினார்.

பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார். மேலும் இந்திய சமூகத்திற்கு உருவாகி வரும் சவால்களை கையாள்வது நம் அனைவருக்குமான ஒரு பகிரப்பட்ட தேசிய பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். நம்மைப் பிரிக்க முற்படும் சக்திகளுக்கு எதிராக நாம் சமூகத்தை ஒன்றிணைக்க வேண்டும். தற்சார்பின் முக்கியத்துவம் குறித்து நமது சக குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். 2047-ஆம் ஆண்டுக்குள் ஒரு விக்ஸித் பாரதத்தை உருவாக்கும் தீர்மானத்தில் ஒவ்வொரு தனிநபரும் ஈடுபட வேண்டும் என்றார்.

# பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி; பதக்கங்களை குவித்த தமிழக வீராங்கனை துளசிமதிக்கு ரூ.1.25 கோடி பரிசு: முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை 24, அக்டோபர் 2026: பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், 2 வெள்ளி வென்ற துளசிமதிக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும் துளசிமதி முருகேசனின் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; "ஜப்பானில் நடைபெற்றுவரும் 5-வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பேட்மிண்டன் விளையாட்டில், பெண்கள் இரட்டையர் ஷிலி3-ஷிஹி5 பிரிவில் தங்கப் பதக்கமும், கலப்பு இரட்டையர் ஷிலி3-ஷிஹி5 பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்ற இந்திய அணிகளுக்கும், அவ்வணிகளில் இடம்பெற்றிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகள்!

மிராங்கனை துளசிமதி முருகேசனின் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர், இதுவரை மூன்று பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவரது தொடர் வெற்றி, சாதிக்கத் துடிக்கும் இளம் தலைமுறையினருக்கு புதிய நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கிறது. அவரைப் போன்ற திறமைமிக்க அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குத் தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக நிற்கும்" என தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் இந்தியாவை இழிவுபடுத்தும் ராகுல்; காங்கிரசை ஆட்டிப்படைக்கும் தீவிர 'நக்சல்' மனநிலை; பிரதமர் மோடி ஆவேச தாக்குதல்...!!

சென்னை 24, அக்டோபர் 2026: மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளிநாடுகளுக்குச் சென்று இந்தியாவை அவமதிப்பதாகவும், காங்கிரஸ் கட்சியை நக்சல் சிந்தனையாளர்கள் ஆக்கிரமித்துள்ளதாகவும் பிரதமர் மோடி பகிரங்கமாக சாடியுள்ளார். நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, வெளிநாட்டுப் பயணங்களின் போது இந்திய ஜனநாயகம் மற்றும் நாட்டின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தார்.

இதற்கு ஆளும் பாஜக தரப்பில் தொடர்ச்சியாக கடும் கண்டனங்கள் எழுந்து வந்தன. இந்த அரசியல் மோதல்களுக்கு மத்தியில், தலைநகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசினார். அப்போது ராகுல் காந்தியின் செயல்பாடுகளைக் கடுமையாகச் சாடிய அவர், உலகம் முழுவதும் ஒரு புதிய அமைதியை எதிர்நோக்கும் வேளையில், இந்தியாவில் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த கனவு காண்பதாகக் குற்றம்சாட்டினார். தொடர்ந்து பேசிய அவர், 'நாட்டின் நற்பெயரைக் கெடுப்பதையே சிலர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

'ெளிநாடுகளுக்குச் சென்று நாட்டை அவமதிப்பதோடு, நமது உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டினர் தலையிட வேண்டும் என்று கெஞ்சுகின்றனர். ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து 1 ஆண்டில் விண்ணில் ஏவப்படும் ராக்கெட்டுகளின் எண்ணிக்கையை விட, காங்கிரஸ் கட்சி தனது தோல்வி அடைந்த தலைவரை மீண்டும் மீண்டும் நிலைநிறுத்த முயற்சிக்கும் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது' என்று எள்ளி நகையாடினார், இதன் காரணமாக சுயமாக சிந்திக்கும் திறனையே அக்கட்சி இழந்து விட்டது. காங்கிரஸ் கட்சி தன்னைத்தானே அழித்துக் கொள்வது பற்றி எங்களுக்கு எந்த கவலையும் இல்லை' என்று ஆவேசமாக முழங்கினார். சர்வதேச மாநாட்டில் பிரதமர் மோடி ஆற்றிய இந்த உரை தேசிய அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரே நாளில் 7 எண்ணெய் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல்: ஹோர்முஸ் நீரிணையில் உச்சக்கட்ட பரபரப்பு...



சென்னை 24, அக்டோபர் 2026: ஹோர்முஸ் நீரிணையில் ஒரே நாளில் 7 கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஈரான் தகவல் தெரிவித்துள்ளது. இதில் எண்ணெயை ஏற்றிச் சென்று கொண்டிருந்த நான்கு கப்பல்கள் நேரடியாகத் தாக்கப்பட்டு தீப்பிடித்ததாகவும், மற்ற மூன்று கப்பல்கள் கடல்சார் கண்ணிவெடிகளில் (naval mines) சிக்கி சேதமடைந்ததாகவும் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) தெரிவித்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் நிகழ்த்தப்பட்ட இந்த தாக்குதல்களில் சேதமடைந்தவை எந்த நாட்டு கப்பல்கள், உயிரிழப்புகள் எத்தனை என்பன குறித்த விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. எப்போது வேண்டுமானாலும் மீண்டும் முழு அளவிலான போர் மீண்டும் தொடங்குமோ என்ற கவலைகளால் ஒரு பக்கம் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இந்த தாக்குதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

தற்போது தகால்க் நடத்தப்பட்ட பகுதிகளை தவிர்த்து ஹோர்முஸ் நீரிணையின் மற்ற பகுதிகள் வழியாக எண்ணெய்க் கப்பல்கள் கடந்து செல்ல அமெரிக்கா உதவினால், மத்திய கிழக்கு முழுவதும் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்றும் ஐஆர்ஜிசி எச்சரித்துள்ளது.

## இண்டஸ்இண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனம் சட்டப்பூர்வ ஒப்புதலைத் தொடர்ந்து ஷரத் மாத்தூரை நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக நியமித்துள்ளது

சென்னை 24, அக்டோபர் 2026: இண்டஸ்இண்ட் இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (மிமிபிலி) குழுமத்தின் ஒரு அங்கமான இண்டஸ் இண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (முன்னர் ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்), சட்டப்பூர்வ ஒப்புதல்களைத் தொடர்ந்து, ஷரத் மாத்தூர் அவர்களை அதன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக நியமித்ததை இன்று அறிவித்தது.

அமைப்பு ரீதியான மாற்றம், விநியோக விரிவாக்கம், தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கம், வளர்ச்சி மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் சிறந்த சாதனைப் பதிவைக் கொண்டுள்ள ஷரத் அவர்கள் காப்பீடு மற்றும் நிதிச் சேவைகள் துறையில் மூன்று தசாப்தங்களின் அனுபவத்தைக் கொண்டு வருகிறார்.

இண்டஸ்இண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இணைவதற்கு முன்பு, யுனிவர்சல் சோம்போ ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றினார். அங்கு அமைப்பு ரீதியான மாற்றத்திற்கு தலைமை தாங்கி, அதன் விநியோகம், இடர் மேலாண்மை, யூடபிள்யு ஒழுக்கம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வாடிக்கையாளர் சேவை திறன்களை வலுப்படுத்தினார். அதற்கு முன்பு, எஸ்பிஐ ஜெனரல் இன்சூரன்ஸ் மற்றும் ஐசிஐசிஐ லொம்பார்ட் நிறுவனங்களில் தலைமைப் பொறுப்புகளை வகித்து, அவற்றின் ஆரம்பக் கட்டங்களிலிருந்து வளர்ச்சிக்கு பங்களித்தார்.

இண்டஸ்இண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில், வாடிக்கையாளர் மையப்படுத்தல், டிஜிட்டல் புத்தாக்கம், காப்பீட்டு உள்ளடக்கம், லாபகரமான வளர்ச்சி மற்றும் வலுவான நிர்வாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நிறுவனத்தின் அடுத்த கட்ட மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கு ஷரத் தலைமை தாங்குவார். வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல், விநியோக கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல் மற்றும் மீள்திறன் கொண்ட, தொழில்நுட்பத்தால் இயக்கப்படும், வாடிக்கையாளர்-கவனம் கொண்ட நிறுவனத்தை உருவாக்குதல் ஆகியவை அவரது முன்னுரிமைகளில் அடங்கும்.

ஷரத், இன்ஸ்டிடியூட் ஆஃப் டைரக்டர்ஷ் இன் ஃபெல்லோ உறுப்பினராகவும், இந்தியாவின் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்னல் ஆடிட்டர்ஸ் இன் ஒரு உறுப்பினராகவும் உள்ளார். மேலும்,



பென்சில்வேனியா பல்கலைக்கழகம், இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ், ஹார்வர்ட் பிசினஸ் மற்றும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கார்ப்பரேட் அஃபேர்ஸ் ஆகியவற்றில் நிர்வாகத் தலைமைத்துவம் மற்றும் இணக்கத் திட்டங்களை முடித்துள்ளார்.

இவரது நியமனம், வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நிலையான நீண்டகால மதிப்பை உருவாக்குவதோடு, ஒரு வலுவான, மிகவும் அணுகக்கூடிய மற்றும் வாடிக்கையாளர்-மையப்படுத்தப்பட்ட காப்பீட்டு வணிகத்தை உருவாக்குவதற்கான இண்டஸ் இண்ட் ஜெனரல் இன்சூரன்ஷ் இன் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

## சின்மயா அமிர்தப் பெருவிழா உலகளாவிய மாநாட்டைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்

சென்னை 24, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று (23.10.2026) புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் சின்மயா அமிர்தப் பெருவிழா உலகளாவிய மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், சின்மயா மிஷன் என்பது வெறும் நிறுவனம் மட்டுமல்ல எனவும் அது பல ஆண்டுகால புனித தீர்மானங்களால் இயக்கப்படும் ஒரு நிலையான அமைப்பு என்றும் குறிப்பிட்டார்.

சுவாமி சின்மயானந்தரை 1993-ம் ஆண்டில் வதோதராவில் தாம் சந்தித்ததைப் பிரதமர் நினைவு கூர்ந்தார். அப்போது அவருடன் இளைஞர் மேம்பாடு குறித்து ஆலோசனை நடத்தியதாக பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவின் உணர்வும் விவேகமும் அழியாதவை என்பதால், அது பல்லாயிரம் ஆண்டுகளாக அறிவையும் ஞானத்தையும் தேடும் நாடாக நிலைத்திருக்கிறது என்று பிரதமர் தெரிவித்தார். சுவாமி சின்மயானந்தர் ஆன்மீகத்தைப் பற்றி எவ்வளவு தீவிரமாகப் பேசினாரோ, அதே அளவு தேசிய முன்னுரிமைகள் குறித்தும் பேசினார் என்பதை பிரதமர் எடுத்துரைத்தார். தேசமே நமது கலாச்சாரம், வாழ்வின் அடையாளம் என்பதால், ஆன்மீக வளர்ச்சி, தனிப்பட்ட வளர்ச்சிக்கும் தேசிய முன்னேற்றத்திற்கும் உந்துசக்தியாக இருக்க வேண்டும் என்று அவர் போதித்தார் என பிரதமர் தெரிவித்தார்.

2015-ம் ஆண்டு சின்மயானந்தரின் நூற்றாண்டு விழாவின் போது வெளியிடப்பட்ட நினைவு நாணயத்தை நினைவு கூர்ந்த பிரதமர், சுவாமிஜியின் வாழ்க்கையானது ஞானம், கர்மம், பக்தி ஆகியவற்றின் ஒரு குறிப்பிடத்தக்க சங்கமமாக இருந்தது என்றார்.

சின்மயா மிஷனால் நிறுவப்பட்ட விரிவான கல்வி கட்டமைப்பைப் பிரதமர் எடுத்துரைத்தார். நாடு முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட சின்மயா கல்வி நிறுவனங்கள் தற்போது லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைத்து வருவதாக அவர் கூறினார். இந்த நிறுவனங்களில் மாணவர்கள் நவீன கல்வியைப் பெறுவதோடு, இந்திய விழுமியங்களையும் கற்றுக் கொள்கிறார்கள் என்று பிரதமர் குறிப்பிட்டார்.



இந்தியப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் சுவாமிஜியின் வாழ்நாள் அர்ப்பணிப்பை எடுத்துரைத்த பிரதமர், கன்னியாகுமரியில் கடலில் விவேகானந்தர் பாறை நினைவகத்தைக் கட்ட வேண்டும் என்ற ஏக்நாத் ரானடேயின் தீர்மானத்திற்கு சுவாமிஜி உறுதுணையாக நின்று, அத்திட்டத்திற்கான முதல் நிதிப் பங்களிப்பை வழங்கியதை நினைவு கூர்ந்தார். அந்த நினைவுச்சின்னம் இப்போது உலக அளவில் கோடிக்கணக்கான மக்களுக்கு உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

## சென்னை கிளைத் துவக்கத்தின் வாயிலாக தமிழக முதலீட்டாளர்களுக்கான தனது சேவையை யூனியன் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம் மேலும் வலுப்படுத்துகிறது

சென்னை 24, அக்டோபர் 2026: யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் தை-இச்சி லைஃப் குரூப் ஆகியவற்றின் கூட்டு ஆதரவுடன் செயல்படும் யூனியன் மியூச்சுவல் ஃபண்ட் (யூனியன் எம்எஃப்), சென்னையில் தனது புதிய கிளை அலுவலகத்தைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் விநியோகக் கூட்டாளர்களுக்கான தனது அர்ப்பணிப்பை அது மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இந்த பிராந் தியத்தில் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு ஒரு முக்கியத் தொடர்பு மையமாக இக்கிளை விளங்குவதோடு, நுகர்வோர் ஈடுபாடு, அணுகல் தன்மை மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான யூனியன் மியூச்சுவல் ஃபண்டின் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருக்கும்.

இந்த வளர்ச்சி குறித்து, யூனியன் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ராஜ்கமல் திவாரி கூறுகையில்: "வலுவான நிதி ஒழுக்கக் ணூலாச்சாரம் மற்றும் தொடர்ந்து அதிகரித்து வரும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கையோடு, பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்) துறைக்கு தமிழ்நாடு நீண்ட காலமாக ஒரு முக்கியமான சந்தையாக விளங்கி வருகிறது. இந்தச் சென்னையில் தொடங்கப்பட்டுள்ள கிளை அலுவலகம், இப்பிராந்தியத்தில் எங்களது இருப்பை வலுப்படுத்துவதற்கும், முதலீட்டாளர்கள் மற்றும் விநியோகக் கூட்டாளர்களுடன் ஆழமான உறவுகளை உருவாக்குவதற்கும் எங்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது" என்றார்.

"அதிகப்படியான முதலீட்டாளர்கள் தங்களின் நீண்ட கால நிதித் திட்டமிடலின் ஒரு பகுதியாக பரஸ்பர நிதிகளை (மியூச்சுவல் ஃபண்டுகளை) ஏற்றுக் கொண்டு வரும் நிலையில், அவற்றுக்கான அணுகல்தன்மையும் நுகர்வோர் ஈடுபாடும் முன்னெப்போதையும் விட மிகவும் முக்கியமானதாக மாறுகின்றன. இப்பிராந்தியம் முழுவதிலும் உள்ள முதலீட்டாளர்களுக்கு ஆதரவளிப்பதையும், முறையான முதலீட்டு அணுகுமுறையின் மூலம் அவர்கள் தங்களின் நிதி இலக்குகளை அடைய உதவுவதையும் நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்."

செப்டம்பர் 2026 நிலவரப்படி, தமிழ்நாட்டின் பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்) துறையின் கீழ் நிர்வகிக்கப்படும் மொத்த சொத்து மதிப்பு தோராயமாக ரூ.4.07 லட்சம் கோடியாக உள்ளது. இதன் மூலம் இத்துறைக்கு தமிழ்நாடு தொடர்ந்து ஒரு முக்கிய சந்தையாகத் திகழ்கிறது. செப்டம்பர் 2026 நிலவரப்படி, தோராயமாக ரூ.2.95 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் சென்னை இந்த வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்களிப்பாளராகத் தொடர்கிறது. இது மாநிலத்தின் பரஸ்பர நிதிச் சூழலில் இந்த நகரத்தின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

## வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சையை மலிவு விலையில் அனைவரும் பெறும் வகையில், நோவோ இந்தியா நிறுவனம் Norditropin® FlexPro®-ன் விலையை 35% குறைத்துள்ளது

சென்னை 24, அக்டோபர் 2026: இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்காக, ‘நோர்டிட்ரோபின் பிளெக்ஸ்ப்ரோ’ மருந்தின் விலையை 35% வரை கணிசமாகக் குறைப்பதாக ‘நோவோ இந்தியா’ இன்று அறிவித்துள்ளது.

இன்று முதல், இந்த நவீன வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சை, இந்தியாவிற்கென பிரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்ட புதிய விலையில், 10 மி.கி மற்றும் 15 மி.கி ஆகிய இரண்டு அளவுகளில் கிடைக்கும். இதில், 10 மி.கி மருந்தின் விலை ரூ.16,836-லிருந்து ரூ.11,300 ஆகவும் 33% குறைப்பு, 15 மி.கி மருந்தின் விலை ரூ.25,254-லிருந்து ரூ.16,450 ஆகவும் 35% குறைப்பு மாற்றப் பட்டுள்ளது. இதன் மூலம், ஒரு பேனாவிற்கு முறையே ரூ.5,539 மற்றும் ரூ.8,802 வரை சேமிப்பு கிடைக்கிறது.

இந்த முக்கியமான நடவடிக்கை, இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு மற்றும் அது தொடர்பான பாதிப்புகளுடன் வாழும் மக்களுக்கு, அத்தியாவசிய சிகிச்சைகளை எளிதில் சென்றடையச் செய்யவும், மலிவு விலையில் கிடைக்கச் செய்யவும் ‘நோவோ’ நிறுவனம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

நோவோ இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் விக்ராந்த் ஷ்ரோத்ரியா கூறுகையில், “வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு என்பது ஒரு அரிதான நாளமில்லாச் சுரப்பி கோளாறாகும். வெளியிடப்பட்ட மதிப்பீடுகளின்படி, இது சுமார் 4,000 முதல் 10,000 குழந்தைகளில் ஒருவரைப் பாதிக்கிறது. நோவோ இந்தியாவில், நாங்கள் புதிய கண்டுபிடிப்புகளை வழங்குவதிலும், வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டுடன் வாழும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதிலும் உறுதியாக உள்ளோம். இந்த விலை குறைப்பு, எங்களது அந்த உறுதிப்பாட்டை நேரடியாக வெளிப்படுத்துவதுடன், இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் வாழ்க்கையை மாற்றக்கூடிய சிகிச்சையை கொண்டு சேர்ப்பதற்கான எங்களது நீண்டகால இலக்கை மேலும் வலுப்படுத்துகிறது.”

பிட்யூட்டரி சுரப்பி, இயல்பான வளர்ச்சிக்குத் தேவையான அளவு வளர்ச்சி ஹார்மோனைச் சுரக்காத போது, வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு ஏற்படுகிறது. இந்தக் குறைபாடு பிறப்பிலிருந்தே இருக்கலாம் அல்லது பிற்காலத்தில் ஏற்படலாம். மரபணு அல்லது உடலமைப்பு சார்ந்த கோளாறுகள், பிட்யூட்டரி பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் போன்றவை இதற்கான காரணங்களாக இருக்கலாம்; இருப்பினும், பல குழந்தைகளில் இதற்கான குறிப்பிட்ட காரணம் கண்டறியப் படுவதில்லை.

Norditropin® FlexPro® என்பது, நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, பயன்படுத்த எளிதான, முன்கூட்டியே நிரப்பப்பட்ட வளர்ச்சி ஹார்மோன் பேனா (க்ரோத் ஹார்மோன் பென்) ஆகும். நீண்டகால சிகிச்சை பயணத்தில் இருக்கும் குழந்தைகளும் அவர்களைப் பராமரிப்பவர்களும், இந்தச் சாதனத்தை எளிதாகப் பயன்படுத்தவும், சிகிச்சையைத் தொடர்ந்து முறையாக மேற்கொள்ளவும் ஏதுவாக இது உருவாக்கப்பட்டுள்ளது. நோவோ இந்தியா நிறுவனம், உலகத்தரம் வாய்ந்த தனது சிகிச்சை முறைகளை, தேவைப்படும் நபர்களுக்குச் சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையில் கிடைக்கச் செய்வதற்காக, சுகாதார நிபுணர்கள், தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# சென்னையில் நவம்பர் 26-ல் ‘பிராண்ட் வேர்ல்ட் உச்சி மாநாடு’

சென்னை 24, அக்டோபர் 2026: சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரத் துறைச் செய்திகளை வெளியிடும் தி எகனாமிக் டைம்ஸ் நிறுவனத்தின் யூளமான ET Brand Equity.com, ‘பிராண்ட் வேர்ல்ட் உச்சி மாநாடு தெற்கு 2026’ நிகழ்வின் இரண்டாம் பதிப்பை நவம்பர் 26, 2026 அன்று சென்னையில் உள்ள தாஜ் வெலிங்டன் மியூஸில் நடத்துகிறது. இந்நிகழ்வுக்கு சாம்சங் விளம்பரப் பிரிவு ஆதரவு வழங்குகிறது.

முதல் பதிப்பில் 400-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற நிலையில், இந்த ஆண்டு நடைபெறும் மாநாட்டில் 20-க்கும் மேற்பட்ட அமர்வுகளும், 50-க்கும் மேற்பட்ட பேச்சாளர்களும் இடம்பெறுகின்றனர். தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச் சந்தைப்படுத்தல் அதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள், தொழில்முனைவோர், விளம்பர நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊடகத் துறை வல்லுநர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.




செயற்கை நுண்ணறிவு மூலம் வளர்ச்சி, சில்லறை விற்பனை ஊடகங்கள், இணைக்கப்பட்ட தொலைக்காட்சி, பிராந்திய மொழிக் கதைசொல்லல், உயர்தரப் பொருட்களுக்கான நுகர்வோர் விருப்பம், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் உற்பத்தித் துறையின் மூலம் உருவாகும் புதிய வணிகச் சிந்தனைகள் ஆகியவை மாநாட்டின் முக்கிய விவாதப் பொருள்களாக இருக்கும்.

கருத்துரைகள், நேரடிக் கலந்துரையாடல்கள் மற்றும் குழு விவாதங்கள் வாயிலாக, பிராந்தியப் பண்பாட்டுடன் பொருந்தும் வகையில் வலுவான வணிகக் குறியீடுகளை உருவாக்குவதுடன், அவற்றை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கான உத்திகளும் ஆராயப்படும்.

இடிபி2பி பிரிவின் வணிகத் தலைவர் அமித் குப்தா கூறுகையில், “தென்னிந்தியா எப்போதும் தனித்துவமான முறையில் வணிகக் குறியீடுகளை உருவாக்கி வந்துள்ளது. நுகர்வோரின் ஆழமான நம்பிக்கை, வலுவான பிராந்திய அடையாளம், மக்களின் தேவைகள் குறித்த தெளிவான புரிதல் ஆகியவை இதன் சிறப்பம்சங்கள். இந்த அனுபவங்களைப் பகிர்ந்து, புதிய சிந்தனைகளை விவாதித்து, வளர்ச்சிக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் தளமாக இந்த மாநாடு அமையும்” என்றார்.

நிகழ்வில் தொழில்துறை வல்லுநர்களுடனான சந்திப்புகள் மற்றும் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு வாய்ப்புகளும் வழங்கப்படும்.

பதிவுகள் தற்போது தொடங்கியுள்ளன. சந்தைப்படுத்தல் துறை வல்லுநர்கள், தொழில்முனைவோர் மற்றும் நிறுவனத் தலைவர்கள் அழைப்பைப் பெறவும், கூட்டாண்மை வாய்ப்புகளை அறிந்துகொள்ளவும் கீழ்க்கண்ட இணையதளத்தைப் பார்வையிடலாம்: https://brandequity.economictimes.indiatimes.com/brand-world-summit-south

# நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் நிறுவனத்தின் முதல் தயாரிப்பான ‘கோயம்பத்தூர் மாப்பிள்ளை‘ திரைப்படம் டிசம்பர் 24 அன்று உலகெங்கும் வெளியாகிறது

சென்னை 24, அக்டோபர் 2026: திரைத்துறை ஜாம்பவான்கள் கலந்துகொள்ளும் பிரம்மாண்ட கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக தயாரித்து, உருவாக்கி, நடத்துவதன் மூலம் இந்திய ஊடக வெளியில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ள முன்னணி ஊடகத் தயாரிப்பு மற்றும் திறமை மேலாண்மை நிறுவனமான நாய்ஸ் அண்டு கிரைன்ஸ், திரைப்பட தயாரிப்பில் களம் இறங்கி தனது முதல் படைப்பாக 'கோயம்பத்தூர் மாப்பிள்ளை' திரைப்படத்தை உருவாக்கியுள்ளது.

உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் வரும் டிசம்பர் 24 அன்று வெளியாகவுள்ள இப்படத்தை தமிழ்நாடு முழுவதும் ஏ ஜி எஸ் சினிமாஸ் நிறுவனம் வெளியிடுகிறது.

நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் பேனரில் கார்த்திக் ஸ்ரீநிவாஸ் மற்றும் மகாவீர் அசோக் தயாரித்துள்ள 'கோயம்பத்தூர் மாப்பிள்ளை' திரைப்படத்தை 'கிஷோர் ராஜ்குமார் எழுதி, இயக்கி, நாயகனாகவும் நடித்துள்ளார். பிரபல மலையாள நடிகையும் 'கொட்டுக்காளி' தமிழ் படத்தில் நடித்தவருமான அன்னா பென் நாயகியாக நடிக்க, கே.எஸ். ரவிகுமார், பொன்வண்ணன், விஜி சந்திரசேகர், சித்தப்பு சரவணன், விநோதினி வைத்தியநாதன், லொள்ளு சபா மனோகரன், சிசீசி மோனிஷா பிளஸ்ஸி, வாட்ஸப் மணி, நக்கலைட்ஸ் ரஞ்சித் உள்ளிட்டோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

திரைப்படம் குறித்து பேசிய இயக்குநரும் நாயகனுமான கிஷோர் ராஜ்குமார், "வெறும் 29 நாட்களில் 'கோயம்பத்தூர் மாப்பிள்ளை' படப்பிடிப்பை முடித்துள்ளோம். குண்டாக இருப்பவர்களை நகைச்சுவை வேடங்களில் சித்தரித்து நிறைய படங்கள் வந்துள்ள நிலையில், உடல் எடை அதிகமாகக் கொண்ட பாத்திரத்தை நாயகனாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் இது. தொடக்கம் முதல் இறுதி வரை கலகலப்புக்கு பஞ்சம் இல்லாத வகையில் இந்த திரைப்படம் இருக்கும்," என்று தெரிவித்தார்.

இப்படத்தின் ஒளிப்பதிவாளராகவும் இணை எழுத்தாளராகவும் பிரவீன் பாலு பங்காற்ற, படத்தொகுப்பை ராம் பாண்டியன் கையாண்டுள்ளார். இவர்கள் இருவரும் சதீஷ் நாயகனாக அறிமுகமாகி கிஷோர் ராஜ்குமார் இயக்கிய 'நாய் சேகர்' படத்திலும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. கலகலப்பான பாடல் ஒன்றுக்கு பிருந்தா மாஸ்டர் நடனம் அமைத்துள்ளார். ஸ்ரீசசிகுமார் கலை இயக்குநர் ஆவார். ஆடை வடிவமைப்பு - கிருத்திகா சேகர், நிர்வாக தயாரிப்பு - எஸ். என். அஸ்ரப் /நரேஷ் தினகரன்.




நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் பேனரில் கார்த்திக் ஸ்ரீநிவாஸ் மற்றும் மகாவீர் அசோக் தயாரிப்பில் கிஷோர் ராஜ்குமார் எழுதி, இயக்கி, நாயகனாக நடித்துள்ள 'கோயம்புத்தூர் மாப்பிள்ளை' அனைத்து தரப்பு ரசிகர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்காக டிசம்பர் 24 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

# வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சையை மலிவு விலையில் அனைவரும் பெறும் வகையில், நோவோ இந்தியா நிறுவனம் Norditropin® FlexPro®-ன் விலையை 35% குறைத்துள்ளது

கோயம்புத்தூர் 24, அக்டோபர் 2026: இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்காக, ‘நோர்டிட்ரோபின் பிளெக்ஸ்ப்ரோ’ மருந்தின் விலையை 35% வரை கணிசமாகக் குறைப்பதாக ‘நோவோ இந்தியா’ இன்று அறிவித்துள்ளது.

இன்று முதல், இந்த நவீன வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சை, இந்தியாவிற்கென பிரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்ட புதிய விலையில், 10 மி.கி மற்றும் 15 மி.கி ஆகிய இரண்டு அளவுகளில் கிடைக்கும். இதில், 10 மி.கி மருந்தின் விலை ரூ.16,836-லிருந்து ரூ.11,300 ஆகவும் 33% குறைப்பு, 15 மி.கி மருந்தின் விலை ரூ.25,254-லிருந்து ரூ.16,450 ஆகவும் 35% குறைப்பு மாற்றப் பட்டுள்ளது. இதன் மூலம், ஒரு பேனாவிற்கு முறையே ரூ.5,539 மற்றும் ரூ.8,802 வரை சேமிப்பு கிடைக்கிறது.

இந்த முக்கியமான நடவடிக்கை, இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு மற்றும் அது தொடர்பான பாதிப்புகளுடன் வாழும் மக்களுக்கு, அத்தியாவசிய சிகிச்சைகளை எளிதில் சென்றடையச் செய்யவும், மலிவு விலையில் கிடைக்கச் செய்யவும் ‘நோவோ’ நிறுவனம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

நோவோ இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் விக்ராந்த் ஷரோத்ரியா கூறுகையில், “வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு என்பது ஒரு அரிதான நாளமில்லாச் சுரப்பி கோளாறாகும். வெளியிடப்பட்ட மதிப்பீடுகளின்படி, இது சுமார் 4,000 முதல் 10,000 குழந்தைகளில் ஒருவரைப் பாதிக்கிறது. நோவோ இந்தியாவில், நாங்கள் புதிய கண்டுபிடிப்புகளை வழங்குவதிலும், வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டுடன் வாழும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதிலும் உறுதியாக உள்ளோம். இந்த விலை குறைப்பு, எங்களது அந்த உறுதிப்பாட்டை நேரடியாக வெளிப்படுத்துவதுடன், இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் வாழ்க்கையை மாற்றக் கூடிய சிகிச்சையை கொண்டு சேர்ப்பதற்கான எங்களது நீண்டகால இலக்கை மேலும் வலுப்படுத்துகிறது.”

பிட்யூட்டரி சுரப்பி, இயல்பான வளர்ச்சிக்குத் தேவையான அளவு வளர்ச்சி ஹார்மோனைச் சுரக்காதபோது, வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு ஏற்படுகிறது. இந்தக் குறைபாடு பிறப்பிலிருந்தே இருக்கலாம் அல்லது பிற்காலத்தில் ஏற்படலாம். மரபணு அல்லது உடலமைப்பு சார்ந்த கோளாறுகள், பிட்யூட்டரி பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் போன்றவை இதற்கான காரணங்களாக இருக்கலாம்; இருப்பினும், பல குழந்தைகளில் இதற்கான குறிப்பிட்ட காரணம் கண்டறியப்படுவதில்லை.

Norditropin® FlexPro® என்பது, நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, பயன்படுத்த எளிதான, முன்கூட்டியே நிரப்பப்பட்ட வளர்ச்சி ஹார்மோன் பேனா (க்ரோத் ஹார்மோன் பென்) ஆகும். நீண்டகால சிகிச்சை பயணத்தில் இருக்கும் குழந்தைகளும் அவர்களைப் பராமரிப்பவர்களும், இந்தச் சாதனத்தை எளிதாகப் பயன்படுத்தவும், சிகிச்சையைத் தொடர்ந்து முறையாக மேற்கொள்ளவும் ஏதுவாக இது உருவாக்கப்பட்டுள்ளது. நோவோ இந்தியா நிறுவனம், உலகத்தரம் வாய்ந்த தனது சிகிச்சை முறைகளை, தேவைப்படும் நபர்களுக்குச் சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையில் கிடைக்கச் செய்வதற்காக, சுகாதார நிபுணர்கள், தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

# தமிழகத்திற்கு காவிரியில் இருந்து அடுத்த 15 நாட்களுக்கு 3000 கன அடி தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு

சென்னை 24, அக்டோபர் 2026: தமிழகத்திற்கு காவிரியில் இருந்து அடுத்த 15 நாட்களுக்கு நாள்தோறும் வினாடிக்கு 3000 கன அடி தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. டெல்லியில் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டம் நிறைவு பெற்றது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையே காவிரி நீர் பகிருவு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு ஆகியவை அவ்வப்போது கூடி வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன. காவிரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நீர முழுமையாக வழங்கப்படாத நிலையில் தமிழ்நாடு அரசு இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.



காவிரி ஒழுங்காற்று குழு தமிழகத்திற்கு காவிரியில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி விதம் 15 நாட்களுக்கு திறந்து கர்நாடக அரசு திறந்து விட காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு பரிந்துரைத்த நிலையில் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 60-வது கூட்டம் மேலாண்மை ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 15 நாட்களுக்கு வினாடிக்கு 7500 கன அடி நீர் திறக்க தமிழ்நாடு தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை மேலாண்மை ஆணையம் நிராகரித்தது. மேலும் காவிரியில் வினாடிக்கு 3000 கன அடி வீதம் அடுத்த 15 நாட்களுக்கு திறக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கர்நாடக அரசுக்கு காவிரி மேலாணமை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் பரிந்துரையை ஏற்று காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ்.கே.ஹல்தர் உத்தரவை பிறப்பித்தார். இதனைத்தொடர்ந்து கூட்டம் நிறைவடைந்தது. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டம் (61வது) நவம்பர் 6-ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## "'ஹைக்கூ' ரசிகர்களின் மனதைத் தொடும் ஃபீல் குட் என்டர்டெயினர் திரைப்படம்"- இயக்குநர் யுவராஜ் சின்னசாமி!



சென்னை 24, அக்டோபர் 2026: மொழி, பிராந்திய எல்லைகளைக் கடந்து மனதுக்கு நெருக்கமான காதல் கதைகளுக்கு ரசிகர்கள் மத்தியில் தனி வரவேற்பு உண்டு. இந்த ஆண்டு, உணர்வுப்பூர்வமான கதைகளையும், பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த திரைப்படங்களையும் தமிழ் சினிமா ரசிகர்கள் வரவேற்று வருவது நம்பிக்கையளிக்கும் மாற்றமாக அமைந்துள்ளது. அந்த வரிசையில், வண்ணமயமான காட்சிகளாலும், இதயத்தை வருடும் புரமோஷன் பாடல்களாலும் ஏற்கெனவே கவனம் ஈர்த்துள்ள திரைப்படம் 'ஹைக்கூ'. அக்டோபர் 23 ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் இயக்குநர் யுவராஜ் சின்னசாமி இந்தத் திரைப்படம் குறித்தான தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"'ஹைக்கூ' படத்தை உருவாக்கும்போது, எல்லா வயதினரையும் கவரக்கூடிய ஒரு காதல் கதையைச் சொல்ல வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது. பொதுவாக, காதல் கதைகளுக்கு இளம் ரசிகர்கள் மத்தியில் அதிக வரவேற்பு இருக்கும். ஆனால், வயது வித்தியாசமின்றி அனைவரையும் கவரும் காதல் கதைகள், ஒவ்வொருவரும் தங்களுடன் தொடர்புபடுத்திக்கொள்ளக் கூடிய உணர்வுகளைக் கொண்டிருக்கும். தயாரிப்பாளர்கள் டாக்டர் டி. அருளானந்து சார் மற்றும் மேத்யூ அருளானந்து சார் ஆகியோர் கதையைப் புரிந்துகொண்டு அதன் மீது நம்பிக்கை வைத்தது மகிழ்ச்சியளிக்கிறது.

ஒரு பெண்ணின் காதலைப் பெற முயற்சிக்கும் காதலன் என்ற எல்லைக்குள் மட்டும் ஏகன் கதாபாத்திரம் நின்றுவிடுவதில்லை. எதிர்பாராத விதமாக அவர் செய்யும் ஒரு செயல், அவரது வாழ்க்கையையே மாற்றுகிறது. அதன் பிறகு அவர் எதிர்கொள்ளும் உணர்வுப்பூர்வமான போராட்டங்கள் கதாபாத்திரத்துக்கு மற்றொரு பரிமாணத்தை அளிக்கின்றன. ஏகன் கதாபாத்திரத்துடன் ரசிகர்கள் நிச்சயம் தங்களைப் பொருத்திப் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

'ஹைக்கூ' திரைப்படம் அக்டோபர் 23 ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. சக்தி ஃபிலிம் ஃபேக்டரி நிறுவனத்தின் சக்தி வேலன் பி, இப்படத்தைத் தமிழகம் முழுவதும் வெளியிடுகிறார்.

## 418 திரைப்பட விமர்சனம்: திகிலூட்டும் காட்சிகளுடன் மனதில் பதியும் மர்மப் பயணம்!



சென்னை 24, அக்டோபர் 2026: இந்தியத் திரையுலகில் திகில் திரைப்படங்கள் என்றாலே நகைச்சுவையைக் கலந்து வழங்கும் வழக்கம் அதிகரித்துள்ள நிலையில், பார்வையாளர்களை உண்மையிலேயே அச்சத்தில் ஆழ்த்தும் முயற்சியாக வெளியாகியிருக்கிறது 418. கேஜிஎஃப், சலார் படங்களின் மூலம் பிரபலமான இயக்குநர் பிரசாந்த் நீல் வழங்கியிருக்கும் இப்படம், வெளியீட்டுக்கு முன்பே தனது திகிலூட்டும் காட்சிகள் குறித்த செய்திகளால் கவனம் பெற்றது. பல்வேறு தாமதங்களுக்குப் பிறகு திரையரங்குகளில் வெளியாகியுள்ள இப்படம், மர்மம் நிறைந்த ஒரு விடுதி, அமானுஷ்ய நிகழ்வுகள், மறைக்கப்பட்ட கடந்தகாலம் என ரசிகர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தை வழங்க முயற்சிக்கிறது.

மர்மம் நிறைந்த அறை 418!

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த விவேக் சங்கர் என்ற மருத்துவக் கல்லூரி மாணவராக சூர்யா ராஜ் வீரபதாபினி நடித்துள்ளார். மகனின் கல்விச் செலவுக்காக வீட்டையே அடமானம் வைத்திருக்கும் அவரது பெற்றோர், கர்நாடகக் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள விஜஎம்எஸ் மருத்துவக் கல்லூரியின் புதுப்பிக்கப்பட்ட ஆண்கள் விடுதியில் மகனைச் சேர்க்க அழைத்துச் செல்கின்றனர்.

ஆனால், அந்த விடுதிக்குப் பின்னால் மறைந்திருக்கும் வரலாறு மிகவும் பயங்கரமானது. 15 ஆண்டுகளாகப் பூட்டப்பட்டிருந்த அந்தக் கட்டடம், ஒரு காலத்தில் மனநலக் காப்பகமாகச் செயல்பட்டது. அங்கு நிகழ்ந்த கொடூரமான கொலைகள் அதன் கடந்தகாலத்தை மர்மமாக்கியுள்ளன. விடுதிக்குள் பெண்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், 418-ஆம் எண் அறையும் யாரும் நெருங்கக் கூடாத இடமாகப் பாதுகாக்கப்படுகிறது. விடுதியில் தங்கிய சில நாட்களிலேயே விவேக்கிற்கு விசித்திரமான அமானுஷ்ய அனுபவங்கள் ஏற்படத் தொடங்குகின்றன. அவை அவரது மன நிலையையும் அமைதியையும் பாதிக்கின்றன. கல்லூரியின் மூத்த ஆலோசகரிடம் விளக்கம் தேடியும் தெளிவு கிடைக்காததால், விவேக்கும் அவரது அறைத் தோழரும் மர்மத்தின் பின்னணியை ஆராயத் தொடங்குகின்றனர். அதன்பிறகு விரியும் சம்பவங்களே படத்தின் மையக்கதை.

தீர்ப்பு: குறைகள் இருந்தாலும் கவனிக்கத்தக்க திகில் முயற்சி!

திகில், மர்மம், உளவியல் அச்சம், மனித உணர்வுகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்க முயன்றுள்ள 418, இயக்குநர் கீர்த்தன் நாககௌடாவின் குறிப்பிடத்தக்க முயற்சியாக அமைகிறது. சூர்யா ராஜ் வீரபதாபினி, சைத்ரா ஆச்சார், ப்ரீத்தி பகடாலா உள்ளிட்ட நடிகர்களின் பங்களிப்பும், தினேஷ் திவாகரனின் ஒளிப்பதிவும், வெங்கி ஜிஜியின் இசையும் படத்தின் பலமாக உள்ளன.

மொத்தத்தில், பயத்தை மட்டுமல்லாமல் அதன் பின்னால் மறைந்திருக்கும் மனித வலியையும் பேச முயலும் வித்தியாசமான திகில் திரைப்படம் 418!

418 திரைப்படத்தில் சைத்ரா ஆச்சார், சரண் லக்கராஜு, சூர்யா ராஜ் வீரபதாபினி, ப்ரீத்தி பகடாலா, ஷஷாங்க் பாட்டீல் மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கீர்த்தன் நாககௌடா இயக்கியுள்ள இப்படத்தை ரவி சங்கர் யாலமஞ்சிலி மற்றும் நவீன் யெர்னேனி ஆகியோர் தயாரித்துள்ளனர். பிரசாந்த் நீல் இப்படத்தை வழங்கியுள்ளார். வெங்கி ஜிஜி இசையமைத்துள்ள இப்படத்திற்கு உல்லாஸ் ஹைதூர் கலை வடிவமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இப்படத்தின் மக்கள் தொடர்புப் பணிகளை டி'ஒன் சுரேஷ் சந்திரா கவனிக்கிறார்.

## வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சையை மலிவு விலையில் அனைவரும் பெறும் வகையில், நோவோ இந்தியா நிறுவனம் Norditropin® FlexPro®-ன் விலையை 35% குறைத்துள்ளது

வேலூர் 24, அக்டோபர் 2026: இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்காக, 'நோர்டிட்ரோபின் பிளெக்ஸ்ப்ரோ' மருந்தின் விலையை 35% வரை கணிசமாகக் குறைப்பதாக 'நோவோ இந்தியா' இன்று அறிவித்துள்ளது.

இன்று முதல், இந்த நவீன வளர்ச்சி ஹார்மோன் சிகிச்சை, இந்தியாவிற்கென பிரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்ட புதிய விலையில், 10 மி.கி மற்றும் 15 மி.கி ஆகிய இரண்டு அளவுகளில் கிடைக்கும். இதில், 10 மி.கி மருந்தின் விலை ரூ.16,836-லிருந்து ரூ.11,300 ஆகவும் 33% குறைப்பு, 15 மி.கி மருந்தின் விலை ரூ.25,254-லிருந்து ரூ.16,450 ஆகவும் 35% குறைப்பு மாற்றப் பட்டுள்ளது. இதன் மூலம், ஒரு பேனாவிற்கு முறையே ரூ.5,539 மற்றும் ரூ.8,802 வரை சேமிப்பு கிடைக்கிறது.

இந்த முக்கியமான நடவடிக்கை, இந்தியாவில் வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு மற்றும் அது தொடர்பான பாதிப்புகளுடன் வாழும் மக்களுக்கு, அத்தியாவசிய சிகிச்சைகளை எளிதில் சென்றடையச் செய்யவும், மலிவு விலையில் கிடைக்கச் செய்யவும் 'நோவோ' நிறுவனம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

நோவோ இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் விக்ராந்த் ஷ்ரோத்ரியா கூறுகையில், "வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு என்பது ஒரு அரிதான நாளமில்லாச் சுரப்பி கோளாறாகும். வெளியிடப்பட்ட மதிப்பீடுகளின்படி, இது சுமார் 4,000 முதல் 10,000 குழந்தைகளில் ஒருவரைப் பாதிக்கிறது. நோவோ இந்தியாவில், நாங்கள் புதிய கண்டுபிடிப்புகளை வழங்குவதிலும், வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டுடன் வாழும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதிலும் உறுதியாக உள்ளோம். இந்த விலை குறைப்பு, எங்களது அந்த உறுதிப்பாட்டை நேரடியாக வெளிப்படுத்துவதுடன், இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் வாழ்க்கையை மாற்றக்கூடிய சிகிச்சையை கொண்டு சேர்ப்பதற்கான எங்களது நீண்டகால இலக்கை மேலும் வலுப்படுத்துகிறது."

பிட்யூட்டரி சுரப்பி, இயல்பான வளர்ச்சிக்குத் தேவையான அளவு வளர்ச்சி ஹார்மோனைச் சுரக்காத போது, வளர்ச்சி ஹார்மோன் குறைபாடு ஏற்படுகிறது. இந்தக் குறைபாடு பிறப்பிலிருந்தே இருக்கலாம் அல்லது பிற்காலத்தில் ஏற்படலாம். மரபணு அல்லது உடலமைப்பு சார்ந்த கோளாறுகள், பிட்யூட்டரி பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் போன்றவை இதற்கான காரணங்களாக இருக்கலாம்; இருப்பினும், பல குழந்தைகளில் இதற்கான குறிப்பிட்ட காரணம் கண்டறியப்படுவதில்லை.

Norditropin® FlexPro® என்பது, நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, பயன்படுத்த எளிதான, முன்கூட்டியே நிரப்பப்பட்ட வளர்ச்சி ஹார்மோன் பேனா (க்ரோத் ஹார்மோன் பென்) ஆகும். நீண்டகால சிகிச்சை பயணத்தில் இருக்கும் குழந்தைகளும் அவர்களைப் பராமரிப்பவர்களும், இந்தச் சாதனத்தை எளிதாகப் பயன்படுத்தவும், சிகிச்சையைத் தொடர்ந்து முறையாக மேற்கொள்ளவும் ஏதுவாக இது உருவாக்கப்பட்டுள்ளது. நோவோ இந்தியா நிறுவனம், உலகத்தரம் வாய்ந்த தனது சிகிச்சை முறைகளை, தேவைப்படும் நபர்களுக்குச் சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையில் கிடைக்கச் செய்வதற்காக, சுகாதார நிபுணர்கள், தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

## ஏகன் நடிப்பில் வெளியாகியுள்ள 'ஹைக்கூ' திரைப்படத்திற்கு கிடைத்து வரும் நேர்மறையான வரவேற்பால் திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

சென்னை 24, அக்டோபர் 2026: காதல், நகைச்சுவை, மனதைத் தொடும் உணர்வுகள் என அனைத்து அம்சங்களையும் கொண்ட மனதுக்கு இதமான காதல் கதைகள், தலைமுறைகளைக் கடந்தும் ரசிகர்களுக்கு விருப்பமான படங்களாக உள்ளன. அந்த வகையில், இன்று அக்டோபர் 23ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகியுள்ள 'ஹைக்கூ' திரைப்படத்திற்கு, ஆரம்பகட்டப் பிரத்யேகக் காட்சிகளிலேயே கிடைத்து வரும் நேர்மறையான வரவேற்பு, படத்தின் தயாரிப்பாளர்களான டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோருக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்துள்ளது.

ஏற்கெனவே 'ஜோ' போன்ற பிளாக்பஸ்டர் வெற்றிப் படத்தையும், விமர்சன ரீதியாகப் பாராட்டுகளைப் பெற்ற 'கோழிப்பண்ணை செல்லதுரை' திரைப்படத்தையும் தயாரித்துள்ள இவர்கள், 'ஹைக்கூ' படத்தின் ஆரம்பகட்ட வரவேற்பால் உற்சாகமடைந்துள்ளனர். முதலில் திட்டமிடப்பட்டிருந்த திரையரங்குகளின் எண்ணிக்கையை விட, ரசிகர்களிடமிருந்து கிடைத்த நேர்மறையான கருத்துகளும் அதிகரித்த வரவேற்பும் காரணமாக, தென்னிந்தியா முழுவதும் 450க்கும் மேற்பட்ட திரைகளில் இப்படம் வெளியாகிறது.



இதுகுறித்து தயாரிப்பாளர்கள் பகிர்ந்து கொண்டதாவது, "மனதுக்கு இதமான ஒரு காதல் கதையை ரசிகர்களிடம் கொண்டு சேர்ப்பது எப்போதுமே எங்களுக்கு ஸ்பெஷல். 'ஹைக்கூ' திரைப்படத்தின் ஆரம்பகட்டப் பிரத்யேகக் காட்சிகளுக்குக் கிடைத்துள்ள நேர்மறையான வரவேற்பு எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இப்படத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்கிய இயக்குநர் யுவராஜ் சின்னசாமி, நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். விஷன் சினிமா ஹவுஸ் நிறுவனத்தின் சார்பில் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோர் இப்படத்தைத் தயாரித்துள்ளனர். சித்து குமார் இசையமைத்துள்ள இப்படத்திற்கு பிரியேஷ் குருசாமி ஒளிப்பதிவு செய்துள்ளார். சக்தி பிரணீஷ் பி படத்தொகுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார். ஹரிஹரன் ராம் கூடுதல் திரைக்கதையில் பங்களித்துள்ளார்.

தமிழக வெளியீட்டுப் பணிகளை சக்தி ஃபிலிம் ஃபேக்டரியின் பி. சக்திவேலன் மேற்கொண்டுள்ளார்.